## இராணிப்பேட்டை நகராட்சி

## 2018 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 02 ஆம் நாள் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணி அளவில் நடைபெற்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்

### தலைமை :- தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்

| மன்றக் கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்றக் கூட்டப்பொருள் | மன்றத்தின் தீர்மானம் |
|---|---|---|
| 02.02.2018 | **பொருள் எண். 2774**<br>வார்டு வரையறை ஆணையத்தால் தெரிவிக்கப்பட்ட வழிகாட்டுதல்படி இந்நகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ள இயற்கை அமைப்பினை கருத்தில் கொண்டும் தெருக்கள் / நகராட்சி பகுதியில் இயல்பான அமைப்பினை கருத்தில் கொண்டும் வார்டு மறுவரையறைக்கான வரைவு கருத்துரு தயாரித்து வரைபடங்கள், படிவங்கள் மற்றும் சான்றுகள் உரிய வழிமுறையாக ஆணையத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்பட்டு வரைவு கருத்துரு மறுவரையறை ஆணையத்தின் பரிசீலினைக்குப்பின் பொதுமக்கள், அரசியல் கட்சிகள் மற்றும் பல்வேறு அமைப்புகளின் ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகள் தெரிவிக்க கோரி தினசரி நாளிதழ், நகராட்சி மற்றும் அரசு அலுவலகங்களின் அறிவிப்பு பலகைகளில் விளம்பரம் செய்யப்பட்டது. இதனை தொடர்ந்து பல்வேறு கருத்துருக்களை குறிப்பிட்டு இந்நகராட்சியிலும், மாவட்ட ஆட்சித் தலைவரிடமும் மற்றும் மறுவரையறை ஆணையத்திலும் நேரடியாகவும் / தபால் மூலமும் / மின்னஞ்சல் வழியாகவும் 30 மனுக்கள் வரப்பெற்றது. மேற்கண்டவாறு வரப்பெற்ற மனுக்கள் பரிசீலினை செய்யப்பட்டு மறு ஆய்வு அலுவலர் அவர்களின் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு மாவட்ட மறுவரையறை அலுவலர் அவர்களின் பரிந்துரை பெறப்பட்டுள்ளது. இதன்படி இறுதி வரைவு வார்டு மறுவரையறை கருத்துரு தயார் செய்யப்பட்டுள்ளதனை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுவதுடன், இக்கருத்துருவினை மறுவரையறை ஆணையத்திற்கு உரிய வழிமுறையாக சமர்ப்பிக்கவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>மன்றம் அனுமதிக்கலாம். **ந.க.எண். 2839/2017/சி1** | நகரமன்ற தீர்மானம் எண்.2774 அனுமதிக்கப்படுகிறது |

xxxஒம்./ ஆர்.எஸ்.வெங்கடாசலம்
தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்(பொ),
இராணிப்பேட்டை நகராட்சி.